**தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 258 - கண்டி மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றியல் 05 சொத்து விடயங்களில் முன்னைய ஆண்டில் இறுதி மீதியை விட ரூபா 9,818,250 கூடுதலாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது | திறைசேரி SA 82 இன் பிரகாரம் 05 சொத்து உருப்படிகள் மீளாய்வாண்டில் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளதாக | கணக்கு மீதிகளின் வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பரீட்சை மீதியின் பிரகாரம் 05 நடைமுறை அல்லாத சொத்துக்களின் சேர்ப்பனவுகள் ACA-6 (SA82) அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 7,401,750 ஆன வேறுபாடு ஒன்றும் 02 நடைமுறை அல்லாத சொத்து விடயங்களில் மீளாய்வாண்டில் கையகற்றல் ACA-6 (SA82) அறிக்கையில் கர்ண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 4,325,500 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | ஆரம்ப மீதிகள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் பிரதேச செயலகங்களால் செய்யப்பட்ட சேர்ப்பனவுகள் இவ் வேறுபாட்டிற்கு காரணமாக இருந்ததாக | கணக்கு மீதிகளின் வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்று காணப்படுவதாகவும் உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதன் பிரகாரம் முறைமையை செயற்படுத்து வதற்கு தேவையான மாற்றங்களை செய்வதற்கும் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டதாகவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப் படுத்தி நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிட்டுள்ளதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | அவதானிப்பு | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | xlx ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 7.2 உப பிரிவுகள் | தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் காத்திருப்பு பட்டியலில் உத்தியோகத்தர்கள் இருக்கும் போது, அரச விடுதிகள் | விசேட சந்தர்ப்பங்களை கருத்திற் கொண்டு குடியிருக்கும் காலம் நீடிக்கப்பட்டதுடன் அக்கால எல்லைக்காக | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த குத்தகை காலம் 5 வருடங்களை விஞ்சியுள்ள 5 உத்தியோகத்தர்களுக்கு அவ்வப்போது காலம் நீடிக்கப்பட்டு குடியிருப்பதற்கு வழங்கப்பட்டிருந்தன. குத்தகை காலத்தை விஞ்சி குடியிருக்கும் காலத்திற்கு அறவிடப்பட வேண்டிய தண்ட வாடகை மற்றும் பிரதான மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | பொதுவான வகையில் வீட்டு வாடகை அறவிடப்பட்டுள்ளதுடன் தண்ட வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேண்டும் |

(ஆ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2017 பெப்ரவரி 15 ஆந் திகதிய 2017/03 ஆம் இலக்க திவிநெகும திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி, 2018 மார்ச் 07 ஆம் திகதிய 2018/03 ஆம் இலக்க பொருளாதார வலுப்படுத்தல்) சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | சமூர்த்தி சமூகத்தை பலப்படுத்துவதற்கு செயற்படுத்தப்பட வேண்டிய திட்டவட்டமான பெயரிடப்பட்ட செயற்திட்டங்களில் உள்ளடங்காத ஆடைத் தொழிற்சாலை தொழிலுக்காக 06 பிரதேச செயலகங்களின் 821 நலனாலிகளில் அதாவது 33 சதவீத நலனாலிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன 4 பிரதேச செயலகங்களில் பௌதீக பரிசோதனையின் போது 29 இயந்திரங்கள் பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டன. | நலனாலிகளின் வேண்டுகோளின் பேரில் பிரதேச செயலாளரின் ஆலோசணை மற்றும் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கீராமத்துடன் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கங்கவட்ட கோரளே பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட சுற்றாடல் அலங்கார நிகழ்ச்சித்திட்டத்தின் பூச்சாடிகள் மற்றும் பூக்கள் என்பவற்றை கொள்வனவு செய்யும் போது கட்டளையிடப்பட்ட விதந்துரைளுக்கு இணங்காத | பூச்சாடிகளின் சதுர அடி அளவின் பிரகாரம் நட்டம் ரூபா 28,468 எனவும் அத்தொகையை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நாற்றுக்களின் உயரத்தின் அளவு தவறுதலாக விதந்துரைகள் மற்றும் விலை விபரங்களில் உள்ளடக்கப் | நிறைவேற்றப்பட்ட வேலைக்காக மாத்திரம் கொடுப்பனவு மற்றும் விதந்துரைகளின் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் கொள்வனவு செய்த காரணத்தினால் ரூபா 190,025 ஆன நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது | பட்டுள்ளதாகவும் இறந்த நாற்றுக்களுக்காக புதிய நாற்றுகளை நடுவதாகவும் | வேண்டும். |
| (ஆ) | குண்டசாலை பிரதேச செயலகத்தின் கலாசிரிகம பழைய தோட்பொருட் கைத்தொழில் கட்டிடத்திற்கு அண்மையில் புதிய சனசமூக மண்டபத்தின் நிர்மாண கைத்தொழிலின் கம்பி வலை மேவுகை இடும்போது நிறைவேற்றப்படாத வேலை களுக்காக ரூபா 227,548 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் கணனியூடாக பட்டியலை தயாரிக்கும் போது இலக்கங்களை பதிவு செய்யும் பொழுது தவறு காரணமாக இடம்பெற்றுள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏற்றுக் கொண்டதாக | நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது அத்தாட்சி படுத்தல் வேண்டும் |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்வு செய்தலும்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 உப பிரிவுகள் மற்றும் 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 576,359 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபரிடமிருந்து காரணங்களை கோருவதற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடன் மீதியொன்று பிணையாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட்டு வருவதுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோ கத்தர்கள் தொடர்பாக மாகாண சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை கடன் மீதிகளை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை (Outcome) அடையாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகத்தின் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட பஷன் செயற்திட்டத்திற்காக ரூபா 3,200,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் 29 நலனாலிகளுக்கு வழங்கப்பட்ட பஷன் நாற்றுகளில் 66 சதவீதம் முதல் 93 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிலான நாற்றுக்கள் சிதைவடைந் திருந்ததுடன் எஞ்சியிருந்த நாற்றுக்கள் நன்றாக வளர்ந்திருக்கவில்லை | பயிர்ச் செய்கைக்கு தேவையான இரசாயன பசளை பற்றாக்குறை காரணமாக பயிர்ச்செய்கை சேதமடைந்து இருந்ததாகவும் நலனாலிகளின் வேண்டுகோள் மற்றும் விருப்பின் பேரில் நீண்ட காலமாக பயிரிடக்கூடிய கொடித்தோடை இனம் பாதிப்படைந்த பயிர்ச் செய்கையில் ஏற்படுத்துவதாக | எதிர்பரர்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் செயற் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மினிப்பே பிரதேச செயலக பிரிவில் 43 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 1,732,500 செலவிடப்பட்டு மா அரைக்கும் கைத்தொழில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருந்தது அத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளை விற்பனை செய்வதற்கோ அல்லது அண்மித்த உற்பத்தி செய்ய ஏற்பாடு ஒன்றை செய்வதற்கு திட்டமிடப்படாததன் காரணமாக நலனாலிகளுக்கு இந்த உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாமல் இருந்தது | தற்போது உலர்த்தும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நடமாடும் வியாபாரங்களுக்காக மூன்று பேர் இனங் காணப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் முன்னேற்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டம் திட்டமிடப்பட வேண்டும். |
| (இ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் 2021/01 ஆம் இலக்க வழிகாட்டல் கோவைக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டு கங்க இஹலகோரளை, தெல்தோட்டை மற்றும் பாத்ததும்பர ஆகிய பிரதேச செயலகங்களில் மொத்தம் 12,188,940 ஆன செயற் திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வனிலா கிராம செயற்திட்டம் மற்றும் பசும் பால் உற்பத்தி கிராம செயற் திட்டத்தின் பரீட்சிக்கப்பட்ட நலனாலிகளில் 23 பேர் அரச சேவை மற்றும் தொடர்புபட்ட குடும்பங்களின் நபர்கள் மற்றும் உயர் வருமான மட்டங்களில் உள்ளவர்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 10 அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற இரண்டு இராணுவ சிப்பாய்களுக்கு வழங்கப்பட்ட பசுமாடுகள் தற்போது குறைந்த வருமானம் பெறுவோருக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெல்தோட்ட பிரதேச செயலாளரினால் நலனாலி ரூபா 200,000 ஆன பங்களிப்பினை ஏற்க வேண்டியுள்ளதால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோர் தெரிவு செய்யப்பட்டதாகவும் | வழிகாட்டல்களின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நாங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கங்க இஹல கோரளை பிரதேச செயலகத்தின் மூலம் வெனிலா கிராம செயற்திட்டத்தின் கீழ் வெனிரா கதிர்களை உலர்த்தி விற்பனை செய்யும் நோக்கில் ரூபா 852,200 ஆன கிரயத்தினை மேற்கொண்டு காய்க்கும் இயந்திரம் ஒன்றும் அதனை நிறுவுவதற்காக ரூபா 1,144,218 ஆன கிரயமொன்றை மேற் கொண்டு கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்தது எவ்வாறாயினும் 2022 திசம்பர் மாதத்தின் போது பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கை யாளர்களால் அறுவடை செய்யப்பட்டு பச்சை காய்களை வெளி வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. | அறுவடையை மேற்கொள்வதற்கு ஆரம்பமாகும் காலத்தில் அதிகளவு மழை காணப்பட்டவை மற்றும் இயந்திரத்தை செயற்படுத்து வதற்கு மண்ணெண்ணை வழங்குவதில் சிக்கல் காரணமாக செய்தியாளர்கள் பச்சை காய்களை வெளித் தரப்பினருக்கு விற்பதற்கு முன் வந்ததாக | குறித்த செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (உ) | வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மினிபே பிரதேச செயலகத்தில் மஞ்சள் செய்கை செயற்திட்டம் ஒன்றுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை இல்லாமல் ரூபா 475,800 செலவழித்து 610 கிலோ மஞ்சள் விதை கொள்வனவு செய்யப்பட்டு 10 நலனாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விதை மஞ்சள் முளைக்காமை காரணமாக செலவழிக்கப்பட்ட பணம் விளைவற்றதாக இருந்தது | அக்காலத்தில் காணப்பட்ட அதிக அளவு மழை வீழ்ச்சி காரணமாக மண் கழுவி செல்லப்பட்டமை, அதிகமாக நீர் தேங்கி காணப்பட்டதன் காரணமாக சில விதைகள் முளைக்காது இருந்ததாக | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் நிதியம் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஊ) | பஸ்பாகே கோரளே மற்றும் மினிப்பே பிரதேச செயலகங்களில் 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட வாழ்வாதார திட்டத்தினை பரிசோதனைக்கு உட்படுத்திய போது 06 கிராம சேவைப் பிரிவுகளில் 33 நலனாலிகளிடமிருந்து 26 கைத்தொழில்கள் தோல்வி அடைந்த நிலையில் காணப்பட்டன. அது 79 சதவீத அளவில் காணப்பட்டது. | கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் தோற்று நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக செயற்திட்டங்கள் வெற்றி பெறவில்லை என்பதாக | முறையான கண்காணிப்பு ஒன்றும் பின்தொடர் நடவடிக்கை ஒன்றும் பேணிச் செல்லப்பட வேண்டும் |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 757 இன் பிரகாரம் கண்டி மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவகங்களில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் முறைப்படி பொருள் மெய்மையாய்வு செயற்பாட்டினை மேற்கொள்வதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 9 பிரதேச செயலகங்களில் மண்சரிவு மற்றும் அதி ஆபத்தான என்று பெயரிடப்பட்ட பிரதேசங்களில் 1,070 குடும்பங்கள் வாழ்வதாக இனங்காணப்பட்டு இருந்த போதும் அவர்களை வேறொரு இடத்தில் குடியேற்றுவதற்கு மாற்று வழியொன்று தொடர்பில் கவனம் செலுத்தாமல் ஆபத்தான பிரதேசங்களில் வாழ்வதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. | அத்துமீறிய குடியிருப்பாளர்கள் பிரதேசத்தை விட்டு செல்வதற்கு விருப்பமில்லாமல் இருத்தல், மீள் குடியேற்றத்திற்காக தெரிவு செய்யப்பட்ட இடங்களை விடுவிக்கும் போது சிக்கல்கள் காணப்படுதல் போன்ற காரணங்கள் இதற்கு தாக்கம் அளித்துள்ளதாக | அதி ஆபத்தான பிரதேசங்களில் வாழும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பது தொடர்பில் விரைவில் செயற்படவேண்டும் |
| (ஆ) | கங்க இஹல கோரளை பிரதேச செயலகத்தின் 2020 ஆம் ஆண்டில் அது ஆபத்தான பிரதேசங்களில் குடியிருக்கும் நபர்களை மீள்குடியேற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குருந்துவத்தயில் 10 பேர்ச் காணி வீதம் 234 துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதில் 73 துண்டுகள் குடியிருப்புக்கு பொருத்தமற்றதென தேசிய கட்டிட ஆராய்ச்சி மற்றும் ஒழுங்கமைப்பு நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதில் குடியிருப்பதற்கு பொருத்தமற்ற 43 காணித் துண்டுகள் ஆட்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு ரூபா 200,000 வீதம் முதலாவது தவணைப் பணமாக ரூபா 8,600,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | காணி துண்டுகளை வழங்கும் சந்தர்ப்பம் வரை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கை கிடைத்திருக்கவில்லையென்பதாக | தேசிய கட்டிட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2011 ஜுன் 30 ஆந் திகதி திகதிய ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 5/2011 ஆம் இலக்கம், 2009 ஜுன் 8 ஆந் திகதியயே 11/2009 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் ஓய்வூதிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 10 பிரதேச செயலகங்களில் வெளிநாடு சென்ற 49 ஓய்வூதியம் பெறுவோரின் வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு மற்றும் விசேட கொடுப்பனவுகள் ரூபா 622,730 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கூடுதலான கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும் |
| (ஈ) | 1968 இன் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டம் மற்றும் 2016 இன் 8 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்ட (திருத்த) சட்டத்தின் 512 ஆம் பிரிவின் பிரகாரம் 15 வயதினை அடையும் ஒவ்வொரு இலங்கை பிரசையாலும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 15 வயதை கடந்த 3,334 பேர் அடையாள அட்டைகளைப பெற்று கொண்டிருக்கவில்லை. | கிராம உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தி நடமாடும் சேவைகள் நடத்துவதன் மூலம் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாழ்வாதார சுழற்சி கடன் நிதியக் கணக்கின் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 176,654,710 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 115,504,354 ஆன கடன் மீதி நிலுவையாக இருந்தது. இதில் 128 கடனாளிகளிடமிருந்து ரூபா 4,770,272 ஆன கடன்கள் காலாவதியாகி இருந்ததால் 105 கடனாலிகளிடமிருந்து ரூபா 6,112,935 ஆன கடன் அறவிட முடியாக் கடனக இருந்தது. | விரைவில் கடன்களை தீர்வு செய்யுமாறு உத்தியோகத்தர்கள் மூலம் கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | கடன்களை விரைவில் அறவீடு செய்து சுழற்சி நிதியத்தினை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும் |
| (ஊ) | கண்டி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வந்த கிராமசக்தி மக்கள் வியாபார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1779 கடனாளிகளுக்கு ரூபா 61,534,600 ஆன கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. இக் கடனாளிகளில் 319 பேரிடமிருந்து ரூபா 8,613,503 தொகையான கடன் செயற்பாடற்றிருந்தது. | விரைவில் கடன்களை தீர்வு செய்யுமாறு உத்தியோகத்தர் மூலம் கடனாலிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | அறவிடப்படாமல் காணப்படும் கடன்களை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 08 பிரதேச செயலக பிரிவுகளில் 119 ஓய்வூதியம் பெறுவோருக்கு 2021 மற்றும் 2022 ஆம் காலப்பகுதியில் ரூபா 27,563,134 ஆன ஓய்வு ஊதியம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது அத்தொகையில் ரூபா 13,417,571 தொகை மேலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | தவறு ஒன்று இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன் இதுவரை அறவிடப்படாத கூடுதலான கொடுப்பவனவுளை எதிர் காலத்தில் அறவிடுவதாகவும் மேலதிக கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | கூடுதலான கொடுப்பனவு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விதிக் கோவை (தொகுதி இல 01 இன்) viii ஆம் அத்தியாயத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் அரச உத்தியோகத்தர்களின் இடமாற்ற தேவைப்பாடு சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் 09 பிரதேச செயலாகங்களில் 140 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகளுக்கும் 24 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் ஒரே அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | 05 ஆண்டுகளை விஞ்சியுள்ள உத்தி யோகத்தர்களின் பெயர் பட்டியலொன்று ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |